





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 07.12.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- விளையாட்டு செய்திகள்




We Shine Academy








## தமிழக நிகழ்வுகள்

- **தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளராக தமிழக நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.**
    - இவர் சர்வதேச செலாவணி நிதியத்தின் நிர்வாக இயக்குநராகவும், மத்திய நிதி நிலை அறிக்கை தயாரிப்புப் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.
    - இவர் கடந்த ஜீலை மாதம் தமிழக அரசின் நிதித்துறை செயலாளராக நியமிக்கப்பட்டார்.
    - **செய்தி துளிகள் :**
        - தற்பொழுது தமிழக அரசின் தலைமைச் செயலாளராக சண்முகம் அவர்கள் பணியாற்றி வருகிறார்.
        - தலைமைச் செயலாளர் என்பவர் இந்தியாவில் ஒரு மாநிலத்தை நிர்வகா ரீதியாக ஆளும் அதிகாரியாவார்.
        - தலைமைச் செயலாளரின் கட்டுப்பாட்டில் மாநிலக் காவல்துறை, முழுமாநில அரசு நிர்வாகம், அரசின் நிதிநிலை அறிக்கை தயாரிப்பு, நிதி மேலாண்மை போன்றவை இயங்கி வருகின்றன.

## தேசிய நிகழ்வுகள்

- **2020-21 ஆம் நிதியாண்டுக்கான அறிக்கையை குடியரசு தலைவரிடம் 15-வது நிதிக் குழுவின் தலைவர் என்.கே.சிங் சமர்பித்தார்.**

We Shine Academy
The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

- 2021-26 வரையிலான நிதிக்குழு அறிக்கையை சமர்பிக்க அடுத்த ஆண்டு அக்டோபர் 30-ம் தேதி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.
- **செய்தி துளிகள் :**
  - அரசமைப்பு சட்டத்தின் 280-ஆவது பிரிவின்படி, நிதி தொடர்பான பரிந்துரைகள் வழங்க நிதிக்குழு அமைக்கப்படுகிறது.
  - 2020-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை பரிந்துரைகளை வழங்க 15-ஆவது நிதிக்குழுவை என்.கே.சிங் தலைமையில் அமைக்கப்பட்டது.
  - முதல் நிதிக்குழுவின் தலைர் - K.C.நியோகி ஆவார்.

- **இந்தியாவில் 15.86 லட்சம் நபர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தகவல் அளித்துள்ளது.**
  - இந்திய மருத்துவ ஆய்வு கவுன்சிலின் தேசிய புற்றுநோய் பதிவுத் திட்டத்தின்படி 2018 – ம் ஆண்டு 15,86,571 பேருக்கு புற்றுநோய் உள்ளது.
  - புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உரிய சிகிச்சை அளிக்க இந்தியாவில் மொத்த மாநிலங்களில், 18 மாநில புற்று நோய் சிகிச்சை மையங்களும், 20 சிறப்பு சிகிச்சை மையங்களும் மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது.
  - **செய்தி துளிகள் :**
    - மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்த்தன்

ஆவர்.

- புற்றுநோய்க்கு ரேடியோதெரபி கீமோதெரபி, அறுவைசிகிச்சை போன்ற சிகிச்சை முறைகள் உள்ளன.
- ரத்தம் உறையாமல் போகும் ஹீமோபிலியா நோயால் இந்தியாவில் 1.3 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## விருதுகள்

- **நாட்டின் சிறந்த காவல் நிலையங்களுக்கான விருது – மத்திய அரசு அறிவிப்பு.**
  - தமிழகத்தைச் சேர்ந்த தேனி அனைத்து மகளிர் காவல் நிலையம் 4-ம் இடத்தை பெற்றுள்ளது.
  - அந்தமான் அபர்தீன் காவல் நிலையம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - மத்திய அரசு கடந்த 2016-ஆம் ஆண்டு முதல் நாட்டின் தலைசிறந்த 10 காவல் நிலையங்களுக்கு விருது வழங்கி வருகிறது.
    - இந்த விருது குற்றங்களை கண்டறிதல், குற்றவாளிகளை விரைந்து கைது செய்தல், சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல், சமுதாயப் பணிகளில் ஆர்வம் செலுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வழங்கப்படுகிறது.

## நியமனங்கள்

- **மத்திய உள்துறை அமைச்சக ஆலோசகராக கே.விஜயகுமார் நியமனம்.**
    - இவர் ஜம்மு-காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநரின் ஆலோசகராக செயல்பட்டவர் ஆவர்.
    - பதவியேற்கும் நாளில் இருந்து அடுத்த ஓராண்டு வரை அவர் பதவியில் இருப்பார்.
    - மத்திய ரிசர்வ் காவல் படை இயக்குநராகவும், தேசிய காவல் அகடெமி இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார்.
    - **செய்தி துளிகள் :**
        - மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா
        - இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல்.

## விளையாட்டு செய்திகள்

- **எப்ஐஎச் சிறந்த வீரர் விருது - இந்திய அணியின் கேப்டன் மன்ப்ரீத் சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**
    - சர்வதேச ஹாக்கி சம்மேளம் சார்பில் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருது வழங்கப்படுகிறது.
    - மன்ப்ரீத் சிங் தலைமையில் இந்தியா 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

      வளரும் வீரர் விருதுக்கு விவேக் பிரசாத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

We Shine Academy TM

# திருக்குறள்

**குறள் எண்** : **39**

அதிகாரம் : அறன் வலியுறுத்தல்

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**செயற்போல தோரும் அறனே ஒருவற்கு**

**உயற்பால தோரும் பழி**.

**விளக்கம்:** மு.வ: ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத்தக்கது அறமே செய்யாமல் காத்த கொள்ளத்தக்கது பழியே

We Shine Academy™